மாநிலம் தமிழகம் என்ற நிலையை உருவாக்கும்வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கைகளால் சாலை விபத்துகள் குறைந்துள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் மனத்திண்மை, பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதநேயம் ஆகிய இவர்களின் அனைத்துத் திறமைகளையும், சிறப்புகளையும் முழுமையாக மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றிருப்பது மட்டுமல்லாமல், அன்பு, அறிவு, ஆற்றல், துணிவு, உள்ளத் தூய்மை, ஈகை, மனிதநேயம் ஆகிய அருங்குணங்களோடு, கொடுமைகளையும், அநீதிகளையும் ஒழித்துக்கட்ட அஞ்சாமல் ஆண்மையுடன் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தாறாவது முதல் நூறாவது வரையிலான (பதினான்காவது சட்டமன்றப் பேரவை) பதினைந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.